# சுற்றுலா அபிவிருத்தி நிதியம் - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர, சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

2004 தொடக்கம் 2008 வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 143,504 பெறுமதியான கொடுப்பனவு மறுக்கப்பட்ட 8 காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 486 க்கமைய அறவீடு மேற்கொள்வதற்கோ அல்லது தகுந்த நடவடிக்கை எடுக்கவோ இல்லை.

#### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலா அதிகாரச் சட்டத்தின் 24(2) பிரிவு மற்றும் 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 12(2) ஆம் பிரிவு | சுற்றுலா வரியை அறவிடும் அறிக்கை சுற்றுலா அபிவிருத்தி வரி (சு.அ.வ) அறவிடப்பட்டு 30 நாட்களுக்குள் பொதுத் திறைசேரியின் பிரதிச் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலா அதிகாரச் சட்டத்தின் 24(3) ஆம் பிரிவு | சுற்றுலா அபிவிருத்தி வரியை முகாமைத்துவமிடுவதற்கும் நிர்வகிப்பதற்குமான விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாடுகளால் ஈட்டிய வருமானம் ரூபா 1,975 மில்லியனாகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் வருமானம் ரூபா 1,695 என்பதால் வருமானத்தில் ரூபா 280 மில்லியன் அதிகரிப்புத் தென்பட்டது. சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம் மற்றும் குடியகல்வு வரி வருமானம் என்பன அதிகரித்தமையே வருமான அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாக அமைந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

#### 3.1.1 நிதிய முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பதிவு செய்யப்பட்ட சுற்றுலாப் போக்குவரத்து நிறுவனம் ஒன்றின் 2010, 2011, ஆம் 2012 ஆம் ஆண்டுகளுக்கான சுற்றுலா அபிவிருத்தி வரி ரூபா 2,603,074 குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) நிர்வாகச் செலவினமாக நிதியத்தால் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கிய தொகை ரூபா 4,162,318 ஆகும். எவ்வாறாயினும், நிர்வாகச் செலவினக் கொடுப்பனவிற்கு 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலா அதிகாரச் சட்டத்தில் ஏற்பாடுகள் இருக்கவில்லை.

(இ) 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க நிதியதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், 2003 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய 1303/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் குடியகல்வு வரியாக வானூர்தி மூலமும் கப்பல் மூலமும் செல்லும் சகலரிடமிருந்தும் முறையே 15 மற்றும் 2.5 ஆன ஐக்கிய அமெரிக்க டொலர்கள் அறவிடப்பட வேண்டுமாயினும், இந்த குடியகல்வு வரியை அறவிடும் சிவில் வான் சேவை பணிப்பாளர் நாயகத்தால் 2004 முதல் 2012 திசெம்பர் 31 வரை

ஒரு ஐக்கிய அமெரிக்க டொலர் ரூபா 100 அந்நிய செலாவாணிக்கு நிகரான அடிப்படையில் இவ் வரி அறவிடப்பட்டிருந்த மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் நிதியத்திற்குக் கிடைக்க வேண்டிய குடியகல்வு வரி குறிப்பிடத்தக்களவு கிடைக்காது போயிற்று. அது ஆண்டொன்றிக்கு ஏறக்குறைய ரூபா 850 மில்லியன் வரையிலானது எனப் புலனாகியது.

(ஈ) சுற்றுலா அபிவிருத்தி வரியை அறவிட வேண்டிய நிறுவனங்கள் தொடர்பான தரவு நிரல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒவ்வொரு ஆண்டிலும் அறிவிடப்பட்ட வரி மற்றும் நிறுவனங்களது விற்பனை வருமானம் என்பன பதிவு செய்யப்படாமையால் நிலுவையாக உள்ள வரி தொடர்பாக ஒழுங்குமுறையொன்று இருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிய விநியோகம்

(இ) சுற்றுலா அபிவிருத்தி வரிச் சேகரிப்பு

(ஈ) குடியகல்வு வரிச் சேகரிப்பு

(உ) அனுமதிப்பத்திரமுடைய நிறுவனங்களது நிதி அறிக்கைகளது மீளாய்வு